# 9

# பாக்கியங்கள்

## (5:1-12)

*மலைப்பிரசங்கம் (அதிகாரங்கள் 5-7), மத்தேயு தமது சுவிசேஷத்தில் உள்ளடக்கிய, முதல் போதனைப் பகுதியாகச் செயல்படுகிறது. இதில் அவர், இயேசுவை இஸ்ரவேல் மக்களின் நிறைவான போதகராக, தெய்வீக அதிகாரமும் நித்திய விளைவுகளும் நிறைந்த வார்த்தைகளைப் பேசியவராகச் சித்தரித்தார் (7:21-29). அவர் பதிவுசெய்த இந்தப் பிரசங்கம், ஒழுக்கரீதியான உயர்நெறிகளின் தொகுப்பாக மாத்திரம் இருத்தல் என்பதில் இருந்து அதிகம் தூரத்தில் உள்ளது. இது, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் எல்லார் மீதும், மேசியாவாகிய இயேசு கொண்டுள்ள உயர் அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது.[1]*

*இந்தப் பிரசங்கம், கட்டளைகள் என்பதைக் காட்டிலும், பாக்கியங்கள் என்பவற்றுடன் தொடங்குகிறது. பின்பு இது, வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் நீதியிலும் மிக உயர்ந்த தரத்திற்கு எழும்புகிறது, இருப்பினும் இது கிருபையின் சந்தர்ப்பப் பொருளை விட்டு ஒருக்காலும் விலகிச் செல்வதில்லை.[2] இது உயர்வானதாகவும் பரிசுத்தமானதாகவும் உள்ளது, ஆனாலும் இது நடைமுறைக்கு உகந்ததாகவும் செய்யக்கூடியதாகவும் உள்ளது. இயேசுவின் அதிகாரமுள்ள போதனைகள் - இந்தப் பிரசங்கத்தில் தொகுத்துரைக்கப்பட்டு உதவியளிக்கப்பட்டுள்ளன - பிரதான கட்டளையை முன்னெதிர் நோக்குகின்றன. இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு அளித்த கடைசிக் கட்டளையில், சகல மக்களினங்களையும் சீஷராக்கி அவர்களுக்கு அவர் கட்டளையிட்டவற்றை அவர்கள் கைக்கொள்ளும்படி போதிக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டார் (28:18-20).*

*மலைப்பிரசங்கத்தின் மிகச்சரியான வரைகுறிப்பு ஒன்றை முறைப்படுத்துதல் கடினமாகும். இருப்பினும், இந்தப் பிரசங்கத்தின் முக்கிய பகுதியானது "நியாயப்பிரமாணம்" மற்றும் "தீர்க்கதரிசனங்கள்" ஆகியவற்றின் குறிப்புகளினால் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகக் காணப்படுகிறது (5:17; 7:12). பின்வரும் வரைகுறிப்பு, இயேசு தமது எடுத்துரைப்பில் கூறியுள்ளது என்ன என்பதைப் பற்றிய பொதுவான சித்தரிப்பு ஒன்றைத் தருகிறது.[3]*

I. *அறிமுகம் (5:3-16)*
   - அ. *பாக்கியங்கள் (5:3-12)*
   - ஆ. *உப்பும் வெளிச்சமும் (5:13-16)*

II. *முக்கிய பொருள் (5:17-7:12)*
   - அ. *பழைய மற்றும் புதிய நீதிகள் (5:17-48)*
   - ஆ. *புறம்பான நீதி எதிர். உள்ளான நீதி (6:1-18)*
   - இ. *தேவனைச் சார்ந்திருத்தல் (6:19-34)*
   - ஈ. *பல்வேறு போதனைகள் மற்றும் பொன்விதி (7:1-12)*

III. *முடிவுரை (7:13-27)*

*அ. இரண்டு வழிகள் (7:13, 14)*

*ஆ. பொய்யும் உண்மையும் (7:15-23)*

*இ. வீடு கட்டுபவர்கள் இருவர் பற்றிய உவமை (7:24-27)*

*மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள மலைப்பிரசங்கத்திற்கும் லூக்கா சுவிசேஷத்தில் உள்ள சமனான இடத்தில் செய்யப்பட்ட பிரசங்கத்திற்கும் (லூக்கா 6:17-49) இடையில் ஒப்பீடு ஒன்று ஏற்படுத்தப்பட முடியும். இந்த இரு பிரசங்கங்களும் உண்மையில் ஒரே பிரசங்கமாகத் தான் இருந்தன, மற்றும் மலையின் மீது தரப்பட்ட முழுப் பிரசங்கத்தைச் சுருக்கி மாத்திரம் லூக்கா தமது பதிப்பாகத் தந்தார் என்ற ஒரு கண்ணோட்டம் உள்ளது. பொருளடக்கம், மொழிநடை மற்றும் வரிசை முறை ஆகியவற்றில் உள்ள ஒற்றுமைகளே இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை எழச்செய்துள்ளன.[4] இவை இரண்டும், தனித்தனி சந்தர்ப்பங்களில் தரப்பட்ட இரு வித்தியாசப்பட்ட பிரசங்கங்களாக இருந்தன என்ற இன்னொரு கண்ணோட்டம் உள்ளது. இவற்றிற்கு இடையில் பல வித்தியாசங்கள் நிலவுகின்றன. உதாரணமாக, இந்தப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்ட காட்சியமைவு பற்றிய விவரிப்பு, "மலையின்மேல்" (5:1) எதிர் "சமனான ஒரு இடத்திலே" (லூக்கா 6:17) என்பதாக உள்ளது. இத்துடன் கூடுதலாக, லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கத்தில் ஒரு சில பாக்கியங்களே உள்ளன (மற்றும் அவற்றில் சில, வார்த்தை அமைப்பில் மாறுபட்டுள்ளன), அத்துடன் இது, மத்தேயு சுவிசேஷத்தில் இராத சாபங்களை (லூக்கா 6:20-26) உள்ளடக்குகிறது.*

*இரண்டு பிரசங்கங்களையும் ஒப்பிடும்போது, ஜேக் லூயிஸ் அவர்கள், பின்வரும் குறிப்புரைகளை ஏற்படுத்தினார்:*

1. *இரு பிரசங்கங்களுமே பாக்கியங்களுடன் தொடங்குகின்றன (5:3-12; லூக்கா 6:20-22) மற்றும் வீடு கட்டுபவர்களின் உவமையுடன் முடிகின்றன (7:24-27; லூக்கா 6:47-49).*
2. *மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கம் (107 வசனங்கள்) லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கத்தை விட (30 வசனங்கள்) மிக நீண்டதாக உள்ளது.*
3. *லூக்கா சுவிசேஷத்தில் காணப்படும் பிரசங்கத்தின் பெரும்பகுதி மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கத்தில் காணப்படுகிறது.*
4. *மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கத்தின் பொருளடக்கத்தினுடைய பெரும்பான்மைப் பகுதி, லூக்கா சுவிசேஷத்தின் பிற பகுதிகளில் சிதறிக்கிடக்கிறது (அதிகாரங்கள் 11, 12, 13, 14, 16).*
5. *மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கம், இயேசு பன்னிருவரைத் தேர்ந்து கொள்வதற்கு முன்னர் (10:1-4) நிகழ்த்தப்பட்டதாகத் தோன்றுகிறது, அதே வேளையில் லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கம் அந்த நிகழ்விற்குப் பின்னர் (லூக்கா 6:12-16) நிகழ்த்தப்பட்டதாகத் தோன்றுகிறது.[5]*

*மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் உள்ள பிரசங்கங்கள்*

வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்த்தப்பட்டிருக்க சாத்தியம் உள்ளது. பல் வேறு குழுக்கள் மற்றும் கேட்பவர்களுக்கு இயேசு போதித்திருந்தார் என்பதால், அவர் தாம் கூறியவற்றையே திரும்பவும் அடிக்கடி உரைத்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படியென்றால், மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் ஒரே பிரசங்கத்தைப் பற்றி எழுதியிருக்கக் கூடும் - மத்தேயு மலையின் காட்சியமைவில் வலியுறுத்தம் செய்ய, லூக்கா மலையின் மீதிருந்த ஒரு சமனான இடத்தில் வலியுறுத்தம் செய்தார் எனலாம். என்ன நடந்திருந்தாலும், ஒவ்வொரு எழுத்தாளரும் தமது சுவிசேஷ விபரத்தில் உள்ளடக்கியவற்றைத் தேர்ந்தெடுத்துச் செய்துள்ளனர் என்று தோன்றுகிறது. மத்தேயு, நியாயப்பிரமாணம் மற்றும் தமது சுவிசேஷம் யாருக்கு எழுதப்பட்டதோ அந்த யூதர்கள் ஆகியோருடன் குறிப்பாகத் தொடர்புடைய போதனையைத் தேர்ந்துகொண்டார், இவற்றில் சில போதனைகள் லூக்கா சுவிசேஷத்தில் காணப்படுவதில்லை, அதே வேளையில் லூக்கா, புறஜாதி வாசகர்களுக்கு விசேஷமாகப் பொருத்தமாயிருக்கும் பாடக்கருத்துக்களைத் தேர்ந்துகொண்டார்.[6]

இயேசு மலையில் செய்த தமது பிரசங்கத்தில், அவர் - தமது பிரசங்கத்திற்கு முகப்புரை என்ற வகையில் - அதிகாரத்துவமான நீதி மற்றும் சந்தோஷம் ஆகியவற்றின் மீதான போதனையைக் கொடுத்தார். தேவபக்தியுள்ள வாழ்விற்கு அவரது அணுகுமுறையானது இன்றைய நாட்களில் கலாச்சாரத்தின் கண்ணோட்டத்திற்கு நேர் எதிராக உள்ளது. இயேசுவின் உரைகளில் உருப்பெற்றுள்ள, உண்மையான நீதிக்கு அத்தியாவசியமான விஷயங்கள், "பாக்கியங்கள்" என்று பொதுவாக அறியப்படுகின்றன. இவ்வார்த்தை "சந்தோஷம்," "நல்வாய்ப்புப்பெறுதல்" அல்லது "ஆசீர்வதிக்கப்படுதல்" என்று அர்த்தப்படுகிற *makarios* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறப்பட்ட *beatitudo* என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது.

*Makarios* என்ற சொற்றொடரை இயேசு, தேவன் பிரியமாயிருக்கும் நீதியுள்ள மனிதரைப் பற்றி விவரிக்க, இந்தப் பன்னிரெண்டு வசனங்களில், ஒன்பது முறைகள் பயன்படுத்தினார். "பாக்கியமுள்ளவர்கள்" என்பது எப்போதுமே பன்மையில் உள்ளது, ஒருவேளை இது, தேவபக்தியுள்ள ஒருவர் பெற்றுக்கொள்ளும் சந்தோஷத்தில் முழுமையைக் கருத்தாகத் தெரிவிக்கலாம். இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், இது அந்த நபர் காட்சிப்படுத்தும் பண்புடன், மேன்மையான வாக்குத்தத்தம் ஒன்று பின்தொடருவதாக உள்ளது.

இந்த பாக்கியங்களில் காணப்பட்டுள்ளபடி, உண்மையான சந்தோஷம் என்பது நீதியுள்ள வாழ்வின் துணை உற்பத்தியாக உள்ளது. இந்த ஆவிக்குரிய சந்தோஷம் ஒருவரின் வாழ்வில், மிகவும் ஊக்கம் இழந்த வேளையிலும் கூட திருப்தியை நிரப்புவதாக இருக்கும் (பிலிப்பியர் 4:11, 12; 1 தீமோத்தேயு 6:6-11).[7]

## அறிமுகம் (5:1, 2)

**[1]அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். [2]அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்.**

***வசனங்கள் 1, 2. இயேசு ... மலையின்மேல் ஏறினார்.*** *"மலை" என்பதற்கான கிரேக்க வார்த்தை, நிலத்தில் சார்பளவில் உயர்ந்த பகுதி என்று மிகச்சிறப்பாகப் புரிந்துகொள்ளப்படுகிறது (காண்க 14:23; 15:29). மூன்றாவது சோதனை (4:8), மறுரூபமாகுதல் (17:1) மற்றும் பிரதான கட்டளைகொடுத்தல் (28:16) ஆகியவை உட்பட, மத்தேயு சுவிசேஷத்தின் மற்ற முக்கிய நிகழ்வுகள் உயர்ந்த இடங்களுடன் தொடர்புடையவையாக உள்ளன.*

*பழைய உடன்படிக்கையை நிலைநாட்டுவதற்காக, சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்ற மோசேக்கும் (யாத்திராகமம் 19-24), புதிய உடன்படிக்கைக்கான தயாரிப்பில், மலையின்மீது புதிய பிரமாணம் ஒன்றை வெளிப்படுத்திய இயேசுவுக்கும் இடையில், இவ்வசனப்பகுதி ஒரு நுட்பமான இணைகருத்தை ஏற்படுத்துகிறதா? இந்தத் கருத்து வெளிப்படையானதாக இருப்பதில்லை என்றிருக்கையில் இது, மோசேயினால் உரைக்கப்பட்ட "தீர்க்கதரிசியாக" இயேசு இருக்கிறார் என்ற உண்மையுடனும் அவரது அதிகாரத்துவமான வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் இணையாகத் தெரிவிக்கிறது (உபாகமம் 18:15, 18; நடபடிகள் 3:22, 23; 7:37; காண்க 6:14; 7:40).*

*இயேசுவின் பிரசங்கம் நிகழ்த்தப்பட்ட இடமாகப் பல்வேறு தளங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, அதன் இரட்டைச் சிகரங்களின் காரணமாக, "ஹாட்டினின் கொம்புகள்" என்று அர்த்தப்படுகிற "கர்னே ஹிட்டிம்" என்று அழைக்கப்படுகிறது. இது திபேரியாவின் அருகில் அமைந்துள்ள, அணைந்துபோன எரிமலையாக உள்ளது. ஃபிராங்க் எல் காக்ஸ் அவர்கள் இந்த நிலப்பகுதியைப் பின்வருமாறு விவரித்தார்:*

> கடல் மட்டத்திலிருந்து சுமார் ஆயிரம் அடிகள் உயரத்தில் உள்ள இது, "அண்மையில் இருக்கும் மற்ற உயர்விடங்களில் இருந்து, அறுபது அடிகள் அளவிற்கு மேலே எழுந்துள்ள இரண்டு படைப்புகள் அல்லது கொம்புகளினால் வித்தியாசப்படுத்தப்பட்டுள்ளது." இந்தக் கொம்புகளுக்கு இடையில் பரந்த புல்வெளியான, ஒரு இயற்கை அரங்கம் உள்ளது, இதில் ஒரு தனித்த குரலைக் கேட்பதற்குப் பெரும் மக்கள் கூட்டம் சுலபமாக ஒன்றுகூட முடியும்.[8]

*கலிலேயாக் கடலின் வடக்கில், கப்பர்நகூமுக்கும் தாப்காவுக்கும் இடையில் உள்ள இடமே இந்தப் பிரசங்கம் நிகழ்த்தப்பட்ட இடமாக இருந்திருக்கும் என்பதற்கு அதிக சாத்தியக்கூறு உள்ளது. இன்றைய நாட்களில் இது பாக்கியங்களின் மலை என்று அறியப்பட்டுள்ளது. இம்மலையின் பக்கவாட்டில் இப்போது ஒரு சிற்றாலயம் உள்ளது, இது இயேசு கொடுத்த இந்தப் பிரசங்கத்தை நினைவூட்டுகிறது.*

*இந்தப் பிரசங்கம் எங்கு நிகழ்த்தப்பட்டது என்பதை எவரொருவரும் மிகச்சரியாக அறிவதில்லை என்றாலும், இந்த இடம் கலியேயாக் கடலுக்கு அருகாமையானதுதான் என்பது நிச்சயமாக இருந்தது. இது எங்கு கொடுக்கப்பட்டது என்பதை நாம் ஒருக்காலும் அறியாது போனாலும், என்ன கூறப்பட்டது என்பதை நாம் எப்போதும் அறிய முடிவதை மத்தேயு உறுதிப்படுத்தினார்.*

இயேசு மலையோரத்தில் **அமர்ந்தார்.** இது யூத ரபீக்கள், போதிப்பதற்கான பாரம்பரியமான வழியாக இருந்திருக்கும் (13:2; 23:2; 24:3; 26:55). பின்பு, **அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.** இயேசுவின் "சீஷர்கள்" மற்றும் **திரளான ஜனங்கள்** ஆகியோருக்கு இடையிலான மிகச்சரியான உறவுமுறை தெளிவாக்கப்பட்டிருப்பதில்லை. இந்தக் காட்சியமைவில் கூட்டத்தினர் இருந்தனர் என்பது, இயேசு தமது உரையை முடித்த **பின்பு** அவர்களின் பதில் செயலினால் மாத்திரம் நிச்சயப்படுத்தப்படுகிறது (7:28, 29).

லூக்காவினால் பதிவுசெய்யப்பட்டுள்ள பிரசங்கத்தைத் தொடர்ந்து, மலையின்மீது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி வருகிறது (லூக்கா 6:12-16). அவர்கள் இயேசுவுடன் மலையில் இருந்து இறங்கி "ஒரு சமனான இடத்திற்கு" வந்தனர், அங்கு "அவருடைய சீஷரில் அநேகம் பேரும்"[9] அத்துடன் "யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள்" (லூக்கா 6:17).

எல்லாரும் கூடிவந்தபோது, இயேசு **தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னார்.** மத்தேயுவினால் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை, புனிதமான மற்றும் மேன்மையும் கண்ணியமுமான ஒரு உரையைக் கருத்தாகத் தெரிவிக்கிறது (காண்க நடபடிகள் 8:35; 10:34). டக்ளஸ் ஹேர் அவர்கள், "அவர் தமது அரியணையில் அமர்ந்திருக்கும் ஒரு அரசர் போல அமருகின்றார், அவரது சீஷர்கள், அரண்மனை மண்டபத்தில் அவரை அணுகிய குடிமக்கள் போன்று இருந்தனர், மற்றும் அரசர் தமது துவக்க உரையை நிகழ்த்துகிறார், அதில் அவர் தமது இராஜ்யத்தில் வாழ்வு எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிய கணிசமான விபரங்களை எடுத்துரைக்கிறார்" என்று விளக்கம் அளித்தார்.[10]

இயேசுவின் வார்த்தைகள் அடிக்கடி, புதிய உடன்படிக்கையின் "மாக்னா கார்ட்டா" ("Magna Carta") என்று அழைக்கப்பட்டுள்ளன.[11] இந்தக் கொள்கைகள் யாவும் புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் போதிக்கப்பட்டுள்ளன, மற்றும் இவைகள் ஒவ்வொரு தலைமுறையிலும் கிறிஸ்தவர்களின் வாழ்விற்கானவைகளாக உள்ளன. அவரது வார்த்தைகள் அளிக்கும் அறிவுறுத்துதல்கள் பின்பற்றப்பட்டால், அவைகள் இந்த வாழ்வில் நிறைவான சந்தோஷத்திற்கு வழிநடத்தும்.

## ஆவியில் எளிமையுள்ளவர்கள் (5:3)

**[3]"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது."**

**வசனம் 3. எளிமை** என்பதற்கான கிரேக்க வார்த்தை, கைவிடப்பட்டு மற்றவர்களைச் சார்ந்து இருக்கும் ஒருவரைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சங்கீதங்கள் முழுவதிலும், துன்மார்க்கரான செல்வந்தர்கள், நீதிமான்களான ஏழைகளை அடக்குவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர், இருப்பினும் துன்புறுத்தப்பட்ட இந்த மக்கள் தங்கள் துன்பங்களில் இருந்து தேவனால் விடுவிக்கப்பட்டனர்.[12] இதேபோன்ற ஆய்வுக்கருத்துக்கள், மரியாளின் பாடல் முழுவதிலும் ஓடுகின்றன, அது தாழ்மையுள்ளவர்களுக்கும்

ஏழைகளுக்கும் தேவன் கிருபைகாண்பிக்கிறார் ஆனால் செல்வந்தர்களை அவர் வெறுமையாக அனுப்புகிறார் என்று கூறுகிறது (லூக்கா 1:46-55). தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக, இயேசு "தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி'' மற்றும் ''சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் அளிக்கும்படி" தாம் வந்ததாகக் கூறினார் (லூக்கா 4:18; காண்க ஏசாயா 61:1). புதிய ஏற்பாட்டின் காலகட்டத்தில், ஏழைகள் தேவனைச் சார்ந்திருக்கும்படி துரத்தப்பட்டனர், மற்றும் நீதிமானான ஏழைகள் விசேஷித்த வழியில் தேவனுடைய அக்கறைக்கு உரியவர்களாக இருந்தனர் என்று தீர்க்கதரிசிகளாலும் மற்றவர்களாலும் நினைக்கப்பட்டிருந்தனர்.[13] மனதில் இந்தப் பின்னணியைக் கொண்ட நிலையில், "ஏழைகள்" என்ற சொற்றொடரை லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கம் தகுதியற்றதாக விட்டுவிடுதல் நம்மைத் திகைப்படையச் செய்யக்கூடாது (லூக்கா 6:20).

லூக்காவைப் போலின்றி மத்தேயு, **ஆவியில்** என்ற சொற்றொடரை உள்ளடக்குகிறார். ஆவியில் ஏழ்மையால் தாக்கப்பட்டிருத்தல் என்பது, ஒருவர் தமது ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதற்குத் தமது சொந்த ஆதார மூலங்கள் போதுமானவைகளாக இருப்பதில்லை என்பதை உணர்ந்தறிதல் என்று அர்த்தப்படுகிறது. சங்கீதக்காரர், ''தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" என்று எழுதினார் (சங்கீதம் 51:17). சுயநீதியுள்ள பரிசேயர் மற்றும் அவருக்கு நேரெதிராகத் தாழ்மையுள்ள வரிவசூலிப்பவர் ஆகிய, இருவர் பற்றிய உவமையை இயேசு கூறினார். பரிசேயர் ஜெபத்தில் தம்மையே புகழ்ந்துகொண்டிருக்க, வரிவசூப்பவர், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று கதறினார் (லூக்கா 18:9-14). வெளிப்படுத்தின விசேஷம் 3:17ல், லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் சுயநீதியான எண்ணப்போக்கையும் சுய நிறைவையும் கொண்டிருந்ததற்காக அவர்களை இயேசு சிட்சித்தார். அவர், "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்" என்று கூறினார்.

"ஆவியில் எளிமையாக" இருத்தல் என்பது, மேட்டிமை மற்றும் சுயநீதி ஆகியவற்றினால் நிறைந்திருத்தலுக்கு நேரெதிரானதாக உள்ளது. இது ஆவியில் தாழ்மையுடன் இருத்தலாக உள்ளது. இது இன்றி ஒருவர் இந்தப் பட்டியலின் எஞ்சியுள்ள பாகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எண்ணப்போக்குகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்ற காரணத்தினால், இது பாக்கியங்கள் பற்றிய கர்த்தருடைய பட்டியலின் முதலாவதாக வருகிறது.

"ஆவியில் எளிமையுள்ளவர்கள்" **பரலோக இராஜ்யத்தைச்** சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று இயேசு கூறினார் (3:2ன் மீதான விளக்கங்களைக் காணவும்). ஆவிக்குரிய வகையில் முறிந்துபோன இருதயங்களுடன் தேவனிடம் வருகிறவர்கள் பழுதுநீக்கப்படுவார்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாகக் கர்த்தர், "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ('தாழ்மையுள்ளவர்களின்') ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்'' என்று

*பேசினார் (ஏசாயா 57:15). தங்கள் வாழ்வின் கட்டுப்பாட்டைத் தேவனிடம் ஒப்புவிப்பவர்களை அவர் உயர்த்துகிறார். யாக்கோபு, "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" என்று எழுதினார் (யாக்கோபு 4:10; காண்க நீதிமொழிகள் 29:23).*

## *துயரப்படுகிறவர்கள் (5:4)*

***[4]"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்."***

***வசனம் 4. துயரப்படுதல்*** *என்பதற்கான வார்த்தை, ஒருவேளை, துக்கம் அல்லது வருத்தத்தை வெளிப்படுத்தும் பல கிரேக்கவார்த்தைகளில் மிகவும் பலமானதும் மிகவும் கடுமையானதுமான வார்த்தையாக உள்ளது எனலாம். இது, அன்பிற்குரிய ஒருவரை இழந்துள்ள ஒரு நபரால் அனுபவிக்கப்படுகிற துக்கத்தைச் சித்தரிக்க அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (ஆதியாகமம் 23:2; 37:34, 35; 50:3* [LXX]; *மாற்கு 16:10). இது ஒரு நபரை இறுகப்பிடித்துக்கொண்டு அவர் செல்ல அனுமதிக்காத வகையிலான துக்கமாக உள்ளது. இப்படிப்பட்ட துக்கம் புலம்புதலினாலும் அழுதலினாலும் அடிக்கடி செயல்விளக்கப்படுத்தப்படுகிறது. உண்மையில் "புலம்புதல்" மற்றும் "அழுதல்" என்ற வார்த்தைகள் வேதாகமத்தில் அடிக்கடி ஒன்றாகவே காணப்படுகின்றன. இந்தக் காரணத்தினால், லூக்கா சுவிசேஷத்தில் இதற்கு இணையாக உள்ள பாக்கியம், "அழுகிறவர்கள்" மீது மாத்திரம் ஆசீர்வாதத்தை உரைத்தல் என்பது திகைப்புக்கு உரியதாக இருப்பதில்லை (லூக்கா 6:21).*

*இருப்பினும், அன்பிற்குரியவர்களை இழந்த போனதால் ஏற்பட்ட துக்கத்தைப் பற்றி இயேசு இவ்விடத்தில் கலந்துரையாடினார் என்பது சந்தேகமே. மேசியா "துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய" வருவார் என்று முன்னுரைத்த, ஏசாயா 61:2ம் வசனமே பாக்கியங்களின் பின்புலமாக உள்ளது என்பது உறுதி. பழங்கால இஸ்ரவேல் நாட்டில், துக்கப்பட்டவர்கள், தங்கள் மக்களின் பாவங்கள் நிமித்தமும் அதினால் தேவனிடம் இருந்து வரவிருந்த நியாயத்தீர்ப்பின் நிமித்தமும், மன சஞ்சலமும் அடைந்தனர். துன்மார்க்கரான புறஜாதியார், கர்த்தரால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள்மீது வெற்றியடைவர் என்ற சிந்தனையே அவர்களைத் திகைப்படையச் செய்தது. இப்படிப்பட்டவர்களுக்கு, எருசலேமுக்காக அழுத எரேமியா, ஒரு உதாரணமாக இருக்கிறார் (எரேமியா 9:1, 18; 13:17; 14:17). புலம்பலில் அவர், தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட நகரமான எருசலேம், அதன் பாவத்திற்கான தண்டனை என்ற வகையில் அழிக்கப்பட்டதால், அந்த நகருக்காக அவர் அழுதார்.*

*நீதி என்பது அடிக்கடி துக்கத்தைக் கொண்டுவருகிறது. நீதிமானாகிய லோத்து, "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட" வராக இருந்தார் (2 பேதுரு 2:6-8). "துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்த" இயேசு (ஏசாயா 53:3), கலகம் செய்த எருசலேம் நகரைக் கண்ணோக்கியபோது, அதற்காக அவர் அழுதார் (லூக்கா 19:41-44). அத்துடன் கூடுதலாக பவுல், இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டிராத தமது சக யூதர்களுக்காகத் துக்கப்பட்டார் (ரோமர்*

*9:1-3).*

*துக்கப்படும் நீதிமான்கள் தங்கள் சொந்த பாவங்களுக்காகவும் துக்கப்படுகின்றனர் (சங்கீதம் 51:1-4, 7-12). ஒருவர். தமது பாவங்கள் தேவனுடைய இருதயத்தை உடைந்துபோகப் பண்ணுகிறது என்று உணர்ந்தறியும்போதுதான், அவர் மனமாற்றத்திற்குத் தகுதியுள்ளவராக இருக்கிறார். பவுல், "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" என்று கூறினார் (2 கொரிந்தியர் 7:10).*

*சத்தியம் பின்வருமாறு: தங்கள் சொந்த பாவங்களுக்காவும் மற்றவர்களின் பாவங்களுக்காகவும் துயரப்படுகிறவர்கள்* ***ஆறுதலடைவார்கள்.*** *துயரப்படும் நீதிமான்கள், தங்கள் சொந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுதலையும் தங்களோடு தேவன் இருப்பதையும் அறிவதினால் இந்த வாழ்வின்போது அவரிடத்தில் இருந்து ஆறுதலைக் கண்டடைவார்கள் (11:28-30; 28:18-20; நடபடிகள் 2:38; 1 யோவான் 1:7, 9). நிறைவான ஆறுதல் என்பது, "சகலவிதமான ஆறுதலின் தேவன்" (2 கொரிந்தியர் 1:3), "அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர்கள் யாவையும் துடைக்கப்போகிற" (வெளிப்படுத்தின விசேஷம் 7:17; 21:4), இனிவரவிருக்கும் வாழ்வில் அனுபவிக்கப்படும் (லூக்கா 16:25).*

## *சாந்தகுணம் உள்ளவர்கள் (5:5)*

***5"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்."***

***வசனம் 5. சாந்தகுணம்*** *என்பதற்கான வார்த்தை "பணிவு" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அடிப்படையில் இது, "இதமான" அல்லது "மென்மையான" என்று அர்த்தப்படுகிறது. இருப்பினும், "சாந்தகுணம்"* ("meekness") *என்பது "பலவீனம்"* ("weakness") *என்பதைப் போன்றதாக இருப்பதில்லை. "சாந்தகுணத்தில் மென்மை உள்ளது, ஆனால் சாந்த குணத்திற்குப் பின்னால் இரும்பின் பலம் உள்ளது ... இது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பலமாக இருக்கிறது."[14]*

"Meek" *என்ற ஆங்கில வார்த்தை, சில வேளைகளில் கனத்திற்குரியதைக் காட்டிலும் குறைவான, பலவீனமான, முதுகெலும்பற்ற தனிநபரைச் சித்தரிப்பதாக இருக்கையில், இலக்கிய கிரேக்க மொழியில் இவ்வார்த்தையில் அர்த்தம் இவ்வாறு இருந்ததில்லை. Praus என்பது கிரேக்க கலாச்சாரத்தில் மாபெரும் நெறிமுறைகளில் ஒன்றைக் குறித்தது. வில்லியம் பார்க்ளே அவர்கள், இவ்வார்த்தையைப் பற்றி மொழிபெயர்ப்பாளர்கள் கொண்டிருந்த இருதலைப்பட்ச நிலையை விவரித்தார். அவர், gentle என்ற வார்த்தை இதற்கு மிக அருகாமையில் வருகிறது என்றாலும், "எந்த ஒரு ஆங்கில வார்த்தையும் ... இதை மொழிபெயர்க்காது" என்று கூறினார். இவ்வசனப்பகுதி பற்றி அவர் பின்வரும் விரிவாக்கப்பட்ட பொழிப்புரையை அளித்தார்:*

> *சரியான வேளையில் எப்போதும் கோபம் கொள்பவரும், தவறான வேளையில் ஒருக்காலும் கோபம் கொள்ளாதவருமான, தமது உள்ளுணர்வு மற்றும் உணர்வுத்துடிப்பு ஒவ்வொன்றையும் கட்டுப்பாட்டின்கீழ்*

வைத்துள்ளவருமான மனிதர் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருக்கிறார், ஏனெனில் அவர் தேவனால் கட்டுப்படுத்தப்பட்டவராக, தமது சொந்த அறியாமையையும் தமது சொந்த பலவீனங்களையும் உணர்ந்தறியத் தாழ்மை கொண்டவராக இருக்கிறார், இப்படிப்பட்ட மனிதர், மனிதர்களின் மத்தியில் அரசராக இருக்கிறார்![15]

தாழ்மையுள்ள நபர், சரியான விஷயங்களில் சரியான வேளையில் கோபம் கொள்பவராக இருக்கிறார். அவர் தனிப்பட்ட அவமானங்களைக் காட்டிலும் சமூகத்தில் அநீதியைப் பற்றி அதிகம் அக்கறை உள்ளவராக இருக்கிறார். இப்படிப்பட்ட தனிநபர்களைப் பலவீனமானவர்கள் என்ற வகையில் கண்ணோக்குவதற்கு மாறாக, "சுய கட்டுப்பாட்டின் இந்த வரத்தைக் கொண்டுள்ள மனிதர்கள், தங்கள் ஆசாபாசங்கள், உள்ளுணர்வுகள் மற்றும் மனத்தூண்டுதல்களை கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ள மனிதர்கள், மாபெரும் நபர்களாக இருந்துள்ளனர் என்பது வரலாற்றின் உண்மையாக உள்ளது" என்ற பார்க்ளேயின் கூற்றிற்கு நாம் மேலும் கருத்து ஒருமிக்க வேண்டும்.[16]

*Praus* என்ற வார்த்தை, மோசே மற்றும் இயேசு ஆகிய இருவரையும் விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எண்ணாகமம் 12:3ம் வசனம், "மோசேயானவன் [*praus*, LXX]" பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (KJV) என்று கூறுகிறது. இயேசு தம்மைத்தாமே விவரித்ததில், "நான் சாந்தமும் [*praus*] மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று கூறினார் (11:29; காண்க 21:5). இவ்விருவரில் எவரும் பலவீனமாக இருந்ததில்லை. இவர்கள் மாபெரும் பலம் மற்றும் திறன் ஆகியவற்றின் மனிதர்களாக இருந்தனர், ஆனால் இவர்கள் தேவனால் தங்களுக்குத் தரப்பட்ட பணிப்பொறுப்புக்களை ஊழியக்கார எண்ணப்போக்குகளுடனும் ஞானத்துடனும் நிறைவேற்றினர். "இயேசு தமது மேசியாத்துவ ஊழியத்தை, ஒரு அரசியல்ரீதியான அரசாங்கத்தை நிலைநாட்டுவதில் உள்ள செலாத்தே என்ற (வெறிமிகுந்த) விருப்பார்வத்துடன் செயல்படுத்தவில்லை, ஆனால் அவர் தேவனுக்கும் தமது சக மனிதர்களுக்கும் முன்னால், தாழ்மையாக வாழ்ந்து, தியாகமான ஊழியம் செய்தவராக இருந்தார்."[17]

சாந்தகுணமுள்ளவர்கள் **பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்** என்று கூறியபோது இயேசு எதை அர்த்தப்படுத்தினார்? இந்தத் கேள்விக்குப் பதில் அளிக்க முயற்சி செய்வதற்கு முன்னர், இரு முக்கியமான உண்மைகள் கவனிக்கப்பட வேண்டும். முதலாவது, "பூமி" என்ற சொற்றொடர் "நிலம்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். இரண்டாவது, இந்த பாக்கியம் உண்மையில், சங்கீதம் 37:11ன் (36:11; LXX) மேற்கோளாக உள்ளது: "சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" (NIV). 37ம் சங்கீதம், துன்மார்க்கருக்கும் நீதிமான்களுக்கும் இடையில் ஒரு நேரெதிர்ப் பண்பை நிலைநாட்டுகிறது. இது, "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட (கானான்) நாட்டின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிப்பவர் யார்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கிறது. பொல்லாத சூழ்ச்சிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் துன்மார்க்கரான மனிதர்கள், அந்த நாட்டில் இருந்து துண்டிக்கப்படுவார்கள், அதே வேளையில் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்துள்ள நீதிமான்களும் அவர்களின் சந்ததிகளும்

*நாட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பார்கள் (காண்க ஏசாயா 61:7).*

*இந்த வாக்குத்தத்தம், இயேசு மறுபடியும் வரும்போது, பூமியில் தமது இராஜ்யத்தை நிலைநாட்டுவார் என்று கூறும், ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையை ஆதரிப்பதில்லை. அவர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த சிலரது வாழ்நாள்காலத்தின்போதே அவரது இராஜ்யம் வந்தது (காண்க மாற்கு 9:1; யோவான் 18:36; நடபடிகள் 1:6-8). காலத்தின் முடிவில் கிறிஸ்தவர்கள் சுதந்தரித்துக் கொள்ளவிருக்கும் "புதிய வானங்கள்" மற்றும் "புதிய பூமி" என்பவற்றைப் பகுதியாகக் குறிப்பிடுகிறது என்ற கருத்தில் மாத்திரமே (2 பேதுரு 3:13; வெளிப்படுத்தின விசேஷம் 21:1), இந்த பாக்கியம் பரவசநிலை கொண்டது என்ற வகையில் கண்ணோக்கப்பட வேண்டும். இது, இந்த நிகழ்கால பூமியில், கிறிஸ்துவுக்கு உரியவர்களாக இருப்பவர்கள், தங்களுக்கு அவர் அளிக்கும் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்க, பெரிய அளவில் திறன் கொண்டிருப்பர் என்றும் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 3:21-23). ராபப்ட் மவுன்ஸ் அவர்களின் வார்த்தையைப் பயன்படுத்துவதென்றால், "உக்கிரகுணம் கொண்டவர்கள் தங்கள் கெடுமதியால் பெற்ற ஆதாயங்களை மகிழ்வுடன் அனுபவிக்க முடியாதவர்களாக உள்ளனர். சாந்தகுணம் கொண்டவர்கள் மாத்திரமே, உண்மையும் நிலைத்திருப்பதுமான திருப்தியை அளிக்கும் எல்லா விஷயங்களையும் வாழ்வில் மகிழ்வுடன் அனுபவிக்கும் திறனைக் கொண்டுள்ளனர்."[18] ஜேம்ஸ் மெக்கில் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *பூமியில் உள்ள உடைமைகளின் குடியுரிமைப் பட்டாக்களை யார் கொண்டிருந்தாலும், இது நமது பிதாவின் உலகமாக உள்ளது, சாந்தகுணம் கொண்டவர்கள் அவரது பிள்ளைகளாவும் சுதந்தரர்களாவும் உள்ளனர் ...*
>
> *சாந்தகுணமுள்ளவர்கள் - உண்மையான நிறைவாழ்வான - இனிவரும் வாழ்வில் நூறுமடங்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கும், நித்திய ஜீவன் உண்டாயிருக்கும் என்ற வாக்குத்தத்தத்துடன், இந்த பூமியை, இந்த வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர்! (மாற்கு 10:30).[19]*

## *நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் (5:6)*

***6 "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்."***

***வசனம் 6. பசிதாகம்*** *என்பது ஒருவேளை, மனிதர்கள் கொண்டிருக்கும் மிகவும் பலத்த மற்றும் மிகவும் அடிக்கடி ஏற்படும் சரீரப்பிரகாரமான விருப்பங்களாக உள்ளன எனலாம். இருப்பினும், நவீன உலகத்தில் வாழ்ந்துகொண்டு உணவு மற்றும் பானம் ஆகியவை உடனடியாகக் கிடைக்கக்கூடிய வகையில் உள்ள மக்களுக்கு, வலிவான பசி மற்றும் தாகம் என்பவை அந்நியமாக இருக்கின்றன. பசியுடன் இருத்தல் என்றால் எவ்வாறு இருக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார், ஏனெனில் அவர் வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் பகலும் இரவும் உபவாசமாயிருந்தார் (4:2ன் மீதான விளக்கவுரையை காணவும்). லூக்கா சுவிசேஷத்தில் உள்ள பிரசங்கம், "இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள்"*

என்று மாத்திரம் கொண்டிருத்தல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது (லூக்கா 6:21). தேவனுக்குத் தங்கள் உறுதிப்பாட்டின் நிமித்தம், வாழ்வின் அடிப்படை வசதிகள் எதுவுமின்றிச் சென்றிருந்தவர்கள் அங்கு இருந்திருப்பார்கள் என்பது நிச்சயம் (2 கொரிந்தியர் 6:5; 11:27; வெளிப்படுத்தின விசேஷம் 7:16).

மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு, **நீதியின்மேல்** என்ற தகுதிப்படுத்தும் சொற்றொடரைப் பயன்படுத்தியதன் மூலம், பசி மற்றும் தாகமாயிருத்தலை ஆவிக்குரிய விருப்பத்திற்கு நடைமுறைப்படுத்தினார். இப்படிப்பட்ட உருவகம் சங்கீதங்களில் தனது பின்புலத்தைக் கொண்டுள்ளது:

> மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல,
> தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.
> என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலே தாகமாயிருக்கிறது;
> நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? (சங்கீதம் 42:1, 2).

> தேவனே, நீர் என்னுடைய தேவன்;
> அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்;
> வரண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே
> என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது,
> என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது (சங்கீதம் 63:1).

ஆவிக்குரிய பசியும் தாகமும் ஏசாயாவின் புத்தகத்திலும் காணப்படுகின்றன:

> “ஓ, தாகமாயிருக்கிறவர்களே,
> நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்;
> பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்;
> நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித்
> திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.
> நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும்,
> திருப்திசெய்யாத பொருளுக்காக
> உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?
> நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து,
> நலமானதைச் சாப்பிடுங்கள்;
> அப்பொழுது உங்கள் ஆத்துமா
> கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்”
> (ஏசாயா 55:1, 2).

ஆவிக்குரிய இந்தப் பசியை இயேசு, பூமிக்குரிய தமது சொந்த வாழ்வில் காட்சிப்படுத்தினார். கற்களை அப்பங்களாக்கும்படி அவரை சாத்தான் சோதித்தபோது, அவர் “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்று கூறியதன் மூலம் பதில் செயல் செய்தார் (4:4). இயேசுவின் சீஷர்கள், சீகார் என்ற ஊரில் சென்று உணவு வாங்கிக்கொண்டு, யாக்கோபுவின் கிணற்றருகில் இருந்த இயேசுவினிடம் திரும்பி வந்தபோது, அவர் உண்பதற்கு மறுத்ததைப் பற்றி அவர்கள் திகைப்படைந்தனர். அவர்களிடம் அவர், “நான் புசிப்பதற்கு

நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்றும் "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றும் கூறினார் (யோவான் 4:32, 34).

இந்த பாக்கியம் குறைந்த பட்சம் ஒரு பகுதியிலாவது, "நீதி" என்பதன் மூலம் இயேசு அர்த்தப்படுத்தியது என்ன என்பதை விளக்குதலைக் கொண்டு, அர்த்தம் கூறப்பட வேண்டும். இயேசு பயன்படுத்திய சொற்றொடர், "நீதி" "ஒழுக்கரீதியான நேர்மை" அல்லது "தேவனுக்கு முன்பு சரியாக நிற்குதல்" என்று புரிந்துகொள்ளப்பட முடியும். நீதியைப் பொறுத்த மட்டில், இந்த பாக்கியமானது ஒடுக்கப்பட்ட மற்றும் அடக்கப்பட்டவர்களுக்கு, குறிப்பாக, தேவனுடைய இராஜ்யம் நிலைநாட்டப்படுதலுடன் இணைவுகொண்டிருந்த நீதிக்காகப் பசியும் தாகமுமாக இருந்தவர்களுக்கு, ஊக்குவிப்பை அளித்தது என்று டொனால்டு ஹேங்கர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[20] லியோன் மோரீஸ் அவர்கள், நீதி என்பது ஒழுக்கரீதியான நேர்மையைக் குறித்துப் பணிசெய்ய வேண்டியதாக உள்ளது என்று கூறினார். அவர், "சரியானதை அவ்வப்போது, ஒவ்வொருவரும் செய்கின்றனர், ஆனால் இயேசு தமது உரையைக் கேட்டவர்களுக்கு, அவ்வப்போது செயல்படுதலை அல்ல, ஆனால் சரியானவற்றிற்காகப் பெருவிருப்பம் கொண்டிருத்தல் பற்றியே சுட்டிக்காண்பித்தார்" என்று எழுதினார்.[21] தேவனுடைய மக்கள் யாவரும், பூரணமற்றவர்களாகவும் பாவம் நிறைந்தவர்களாகவும் இருப்பதால், அவர்கள் அவரிடத்தில் நேராக நிலைநிற்குதல் அல்லது நீதியுடன் இருத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு, தேவனுடைய கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும்.

இவ்வசனத்தின் கிரேக்க மொழிக் கட்டமைவு, இயேசுவின் சீஷர்கள் நீதியைச் செய்வதில் அது கொண்டுள்ள விரிவான நித்தியத்துவத்தில் விருப்பமாயிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிப்பதாக இருக்கலாம். நீதி என்பது, தேவனுக்கு முன் நீதியாக வாழுதல் என்று விவரிக்கப்பட்டபடி, ஆவிக்குரிய துணைக்கருத்தாக இருப்பதில்லை, ஆனால் இது ஆவிக்குரிய அத்தியாவசியமான விஷயமாக உள்ளது. கிறிஸ்துவின் சீஷர்களில் எவரும், அதை நாடுவதில் இருந்து விலகியிருப்பதற்குச் சாக்குப்போக்கு எதுவும் கூற இயலாது. அதன் ஒவ்வொரு பகுதியையும் அவர் மனப்பூர்வமாய் விரும்புகிறார்.[22]

தேவனைப் பெருவிருப்பத்துடன் தேடுகிறவர்கள் திருப்தி அடைவார்கள் என்பதே அவர்களுக்கு வாக்குத்தத்தமாக உள்ளது. அவர்களின் இருதயங்களினுடைய விருப்பங்களை நிரப்புவதாகத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். இங்குள்ள மொழிநடை, சங்கீதம் 107:9ன் நினைவூட்டுதலாக உள்ளது: "தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று" (காண்க எரேமியா 31:25; லூக்கா 1:53). தேவன் தமது மக்களின், உடலுக்குரிய மற்றும் ஆவிக்குரிய ஆழ்ந்த மனவிருப்பத்தை திருப்தி செய்யக்கூடியவராக இருக்கிறார். ஆவிக்குரிய இந்த திருப்தி இந்த நிகழ்கால யுகத்தில் நடைபெறக்கூடும். இயேசு, "ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று கூறினார் (யோவான் 6:35). இத்துடன் கூடுதலாக, இந்த ஆவிக்குரிய நிரப்புதல், இனிவரவிருக்கும் யுகத்திலும் நடைபெறும், மற்றும் இந்த நிரப்புதல் ஒரு மாபெரும் விருந்தாக அல்லது திருமணக் கொண்டாட்டமாகச்

*சித்தரிக்கப்பட்டுள்ளது (8:11, 12; 22:1-10; 25:10; வெளிப்படுத்தின விசேஷம் 19:9). பரலோக நகரத்தில், இலவசமாய்க் கிடைக்கும் ஜீவதண்ணீரினால் தாகம் தணிக்கப்படும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:6; 22:17).*

## *இரக்கமுள்ளவர்கள் (5:7)*

***7"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."***

***வசனம் 7. இரக்கமுள்ளவர்கள்*** *என்பது "பரிவிரக்கம் உள்ளவர்கள்" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடிய கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. "இரக்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள தொடர்புடைய சொற்றொடர், இன்னொரு நபர்மீது உணரப்பட்டு மற்றும் செயல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பரிவிரக்கத்தைக் குறிக்கிறது. இன்னொருவர் மீது இரக்கம் உள்ளவர், அவருக்கு தயவு காண்பிப்பதன் மூலம் அவர் மீது தமக்குள்ள மிகச்சிறந்த ஆர்வத்தை வெளிப்படுத்த நாடுகிறார். இவ்வார்த்தை, யாரேனும் ஒருவருக்காக வருத்தமாக உணருதல் என்பதில் இருந்து வேறுபடுகிறது; இது அந்த நபருக்கு உதவுதலில் நேர்மறையான செயல்களை வேண்டிக்கேட்கிறது. இது மற்ற நபரைக் குறித்துப் பரிதாபமாக உணரும் திறனான "பரிவிரக்கம்" என்பதாக இராமல், "மற்றவரின் அனுபவத்தை உணருதல்" என்பதாக உள்ளது.*

*இரக்கத்தின் மீது இயேசுவின் போதனை, புதிய ஏற்பாட்டு உலகத்தின் வாழ்வுமுறை மாதிரியின் வித்துப் போன்ற அடிப்படைக்கு எதிராகச் சென்றது. ரோமானியர்கள், இரக்கத்தை இழிவாய்க் கருதினர் மற்றும் இதை ஆத்துமாவின் வியாதி என்ற வகையில் கண்ணோக்குதலில் புகழ்பெற்றிருந்தனர். இரக்கத்தை பலவீனத்தின் அடையாளமாகக் கருதிய அவர்கள், அதை மனிதகுலத்தின் பலவீனங்கள் யாவற்றிற்கும் மேலாக வெறுத்து ஒதுக்கினர். அவர்கள் மனிதபலத்தை மகிமைப்படுத்தினர் மற்றும் (அவர்களைப் பொறுத்தமட்டில்) அதை இரக்கமானது குறைபாடுள்ளதாக செயல்விளக்கப்படுத்திற்று.[23]*

*இயேசுவின் நாட்களில் இருந்த யூத மதத்தலைவர்கள், மிகவும் அடிக்கடி இரக்கம் இல்லாதவர்களாக இருந்தனர். அவர்கள் சுயநீதி உடையவர்களாக, முரட்டுத்தனமானவர்களாக, மேட்டிமை உள்ளவர்களாக மற்றும் நியாயந்தீர்ப்பவர்களாக இருந்தனர். இறையியல் கேள்வி ஒவ்வொன்றிற்கும் தங்களிடத்தில் பதில் இருப்பதாக அவர்கள் நினைத்தனர், ஆனால் துன்பப்பட்டவர்களுக்கு அவர்கள் இரக்கம் காண்பிக்கவில்லை. துன்பத்தை அவர்கள், பாவத்திற்காகத் தேவனிடமிருந்து வந்த தண்டனை என்ற வகையில் கண்ணோக்கினர் (காண்க லூக்கா 13:1-5; யோவான் 9:1, 13, 34). பவுலின் ஆசிரியரான கமாலியேல் என்பவர், "மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிப்பவர் யாராக இருந்தாலும், அவருக்கு பரலோகத்தில் இரக்கம் காண்பிக்கப்படும், மற்றவர்களிடத்தில் இரக்கமாயிராதவருக்கு பரலோகத்தில் இரக்கம் காண்பிக்கப்படாது" என்று கூறியிருப்பதாக, தல்மூத்தில் மேற்கோள் காண்பிக்கப் பட்டுள்ளது.[24] அவரது காலத்தில் இருந்த மற்றபலரைப் போலின்றி, இரக்கம் பற்றி அவர் சரியான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார்.*

இரக்கம் என்பது தேவனுடைய (யாத்திராகமம் 34:6; லூக்கா 6:36) மற்றும் கிறிஸ்துவினுடைய (எபிரெயர் 2:17) மாபெரும் பண்புகளில் ஒன்றாக உள்ளது. "நியாயப்பிரமாணத்தின் மிகவும் கனமான அளிப்புகளில்" ஒன்று என்ற வகையில் இரக்கத்தை இயேசு அடையாளப்படுத்தினார் (23:23; காண்க 9:13; 12:7). அவரது (இந்த) பாக்கியம், நீதிமொழிகள் 14:21ல் எழுதப்பட்டுள்ளதைப் பிரதிபலிக்கிறது: "தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்." மத்தேயு சுவிசேஷத்தில், "இரக்கம்" என்பதற்கான குறிப்பான சொற்றொடர்கள் பயன்படுத்தப்படாத இடங்களிலும்கூட, இரக்கத்தின் ஆய்வுக்கருத்து ஊடுருவியுள்ளது. Robert H. Gundry அவர்கள் பின்வரும் பட்டியலைத் தொகுத்தார்:

> மரியாளை பகிரங்கமாக அவமானப்படுத்த விரும்பாதபோது அவள்மீது யோசேப்பு இரக்கம் காண்பிக்கிறார் (1:19); ஒரு கணவர் தமது மனைவியைவிவாகரத்துச் செய்யாதிருப்பதன் மூலம் அவள் மீது இரக்கம் காண்பிக்கிறார் (5:31-32 . . .); கடன்பட்டவர்கள் பற்றிய உவமை, மன்னிப்பை இரக்கத்தின் செயலாக விவரிக்கிறது (18:23-35); ஒருமணி நேரம் மாத்திரமே வேலை செய்தவர்களுக்கும் முழுநாள் ஊதியத்தைக் கொடுத்தல் என்பதும் அப்படிப்பட்ட செயலாகவே உள்ளது (20:1-16); "சிறியவர்" (அதிகாரம் 18), பிள்ளைகள், பார்வையற்றவர்கள் மற்றும் தேவாலயத்தில் இருந்த ஊனமுற்றவர்கள் (21:14-16) மற்றும் ஆயக்காரர்கள் மற்றும் விபசாரிகள் (21:28-32) ஆகியோர் மீது இயேசுவின் கவனம், இரக்கத்தை காட்சிப்படுத்துகிறது; மற்றும் இரக்கத்தின் செயல்கள் கடைசி நியாயத்தீர்ப்பில் செம்மறி ஆடுகளை வெள்ளாடுகளில் இருந்து வித்தியாசப்படுத்துகிறது (25:31-46).[25]

மற்றவர்கள் மீது இரக்கமாயிருப்பவர்கள் தங்களுக்கு **இரக்கம் பெற்றுக்கொள்வார்கள்** என்று இயேசு கூறினார். பிற்பாடு அவர், "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" என்று போதித்தார் (6:15). நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கத் தவறினால், நமது சொந்த மன்னிப்பிற்கான கதவை நாம் அடைக்கிறோம் என்றாகிறது. யாக்கோபு, "ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" என்று எழுதினார் (யாக்கோபு 2:13). நமது பாவங்களை மன்னிப்பதற்குத் தேவனுடைய மனவிருப்பம், நம்மீது அவரது அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றில் இருந்து வெளிவருகிறது. அவரது இரக்கம் அவரது கிருபையில் இருந்து வளருகிறது; மற்றும் இவை இரண்டுமே அவரது அன்பின் வெளிப்பாடுகளாக உள்ளன. தேவன் தமது இரக்கத்தில், நமக்கு நியாயமாக விதிக்கப்பட வேண்டிய தண்டனையை நமக்குக் கொடுக்காது இருக்கிறார்; ஆனால் அவரது கிருபையில் அவர் நமக்குக் கொடுக்கப்பட நாம் தகுதியற்றவர்களாக இருக்கும் போதே நமக்கு பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். "இரக்கம் அடையாளங்களைக் கையாளுகிறது. இரக்கம் தண்டனையில் இருந்து விடுதலையை அளிக்கிறது; கிருபை குற்றத்திற்கு மன்னிப்பை அளிக்கிறது. இரக்கம் வேதனையைக் குறைக்கிறது; கிருபை வியாதியைக் குணமாக்குகிறது."[26] ஹேடன் ராபின்ஸன் அவர்கள், கிருபை என்பது நமது பாவம் நிறைந்த தன்மைக்குத் தேவனுடைய

மறுசெயலாக உள்ளது; "இரக்கம் என்பது நமது துன்பங்களுக்கு அவரது மறுசெயலாக உள்ளது" என்று எழுதியபோது, அவர் சரியாகவே இருந்திருக்க வேண்டும்.[27]

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் (5:8)

*[8]**"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."***

***வசனம் 8. சுத்தம்*** என்பதற்கான கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஏழு முறைகள் காணப்படுகிறது. இதை NASB வேதாகமம் "pure" அல்லது "clean" என்று வழக்கமாக மொழிபெயர்க்கிறது. **இருதயம்** என்ற சொற்றொடர், ஒருவருடைய உணர்வுகள், சிந்தனை மற்றும் விருப்பம் ஆகியவை உட்பட, அவரது உள்ளான இயல்பின் மையத்தைக் குறிக்கிறது. வேதபாரகர்கள் பரிசேயர்கள் ஆகியோரால் செயல்படுத்தப்பட்டுவந்த புறம்பான சடங்காச்சாரச் சுத்திகரிப்புக்கு நேரெதிராக, கிறிஸ்துவைப் பின்பற்றுவர்களின் உள்ளான தூய்மையைப் பற்றி, இந்த பாக்கியம் பேசுகிறது (காண்க 15:1-11; 23:25-28). சுத்த இருதயம் என்பது சரியான வாழ்விற்கான யாவற்றிற்கும் ஆதாரமூலமாகவும் அடிப்படையாகவும் உள்ளது. இது இல்லாத நிலையில், சரியான செயல்கள் அர்த்தமற்ற சடங்காச்சாரங்களாக மாறிவிடும் (காண்க 12:34; 15:19). இதன் அவசியத்தைப்பற்றி Michael J. Wilkins அவர்கள் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

> சடங்காச்சாரத் தூய்மையைப் பராமரிக்க, சட்டங்களின் சிக்கலான முறைமையொன்றை ரபீக்கள் மேம்படுத்திக் கொண்டிருந்தனர், இது பிற்பாடு மிஷ்னாவின் பிரிவுகளில் ஒன்றான *தோகோரோத்* (''சுத்திகரிப்பு'') என்று தொகுக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டங்கள் யாவும், இருதயத்தின் சுத்தம் என்ற மிகமுக்கியமான சுத்தத்தை விலக்கிச் செல்லக் கூடாதிருந்தன. சுத்த இருதயம் புறம்பான சுத்தத்தை உண்டாக்குகிறது, இதன் நேரெதிர் செயல் (புறம்பான சுத்தம், சுத்த இருதயத்தை உண்டாக்குதல் என்பது) நடைபெறுவதில்லை ... சுத்த இருதயம் என்பது, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் செய்விளைவு ஏற்படுத்தும் வகையிலான பற்றுதியைத் தேவனிடத்தில் ஒருமனமாகக் கொண்டுள்ள நபரைப் பற்றி விவரிக்கிறது.[28]

இயேசுவின் பாக்கியம், சங்கீதங்களில் விவரிக்கப்பட்டுள்ள, ஆராதனைக்குப் பாதையை எதிரொலிக்கிறது:

> *யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?*
> *யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?*
> *கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து,*
> *தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும்,*
> *கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே (சங்கீதம் 24:3, 4).*

*சங்கீதக்காரர் பின்வரும் விஷயத்தையும் சித்தரித்தார்:*

> *தேவனை, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்,*
> *நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.*
> *உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்,*
> *உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் (சங்கீதம் 51:10, 11).*

*"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்" மாத்திரமே* **தேவனைத் தரிசிப்பார்கள்.** *இந்த சந்தர்ப்பப்பொருளில் "தரிசித்தல்" என்ற வினைச்சொல், கண்களால் காணுதல் என்பதற்கு அப்பால் செல்லுகிறது. இது, தேவனை அனுபவித்து, மகிழ்வுடன் அனுபவித்து மற்றும் அறிதல் என்று அர்த்தப்படுகிறது. தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை என்பது உண்மையே (யாத்திராகமம் 33:20; யோவான் 1:18; 1 தீமோத்தேயு 6:16). இருப்பினும் கிறிஸ்தவர்கள் தங்கள் உடல்ரீதியாக அவரைக் காணாதபோதிலும், விசுவாசத்தின் கண்கள் மூலமாகத் தேவன் இருப்பதை அனுபவிக்க முடியும் என்ற ஒரு கருத்துணர்வு இங்குள்ளது (சங்கீதம் 63:2; எபிரெயர் 11:27). இருந்தபோதிலும் ஒருநாளில், அந்த விசுவாசம் தரிசனமாகும் (காண்க 2 கொரிந்தியர் 5:7), மற்றும் அவரைக் கிறிஸ்தவர்கள் "முகமுகமாய்" தரிசிப்பார்கள் (1 கொரிந்தியர் 13:12; காண்க 1 யோவான் 3:2). பரலோக நகரத்தில், தேவன் தமது மக்களுடன் வாசமாயிருப்பார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:3) மற்றும் அவர்கள் "அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:4).*

## *சமாதானம் பண்ணுகிறவர்கள் (5:9)*

***9 "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்."***

***வசனம் 9. சமாதானம்பண்ணுகிறவர்கள்*** *என்பதற்குப் பின்னால் உள்ள கிரேக்கச் சொற்றொடர், புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இவ்வார்த்தை "முணுமுணுப்பவர், அநாவசியமாய் அடுத்தவர் விஷயத்தில் தலையிடுபவர், வதந்திகளைப் பரப்புபவர், புறங்கூறித் திரிபவர் மற்றும் கலகம் உண்டாக்குபவர் ஆகியோருக்கு எதிரான எண்ணப்போக்கை விவரிக்கிறது" என்று லூயிஸ் அவர்கள் கூறினார்.[29]*

*"சமாதானம் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வடிவங்கள், புதிய ஏற்பாட்டில் தொண்ணூறுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன." மற்றும் இவை ஏறக்குறைய, புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றன. "சமாதானம்" என்பதற்கான (shalom என்ற) எபிரெய வார்த்தை, கலகம் இல்லாமை என்பதைக் காட்டிலும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது; இது மற்றவர்களுக்கு நேர்மறையான நன்மையை விரும்புதலை உள்ளடக்குகிறது. ஹேர் அவர்கள் இவ்வார்த்தையை இதன் கலாச்சார சந்தர்ப்பப்பொருளில் செயல்விளைவுடன் அமைத்தார்:*

> *இந்த பாக்கியம், பேக்ஸ் ரோமானா [ரோமானிய சமாதானம்] என்ற காலவேளையின்போது முதலாவதாக உச்சரிக்கப்பட்டது என்பது*

கவனிக்கத் தக்கதாக உள்ளது. ரோமானியர்கள், இராணுவ ஆற்றலின் விளைவாக, போட்டியிடும் வாடிக்கை மாநிலங்களுக்கு இடையில் சிறு யுத்தங்களுக்கு முடிவு கட்டியிருந்தனர், மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்த கடற்கொள்ளைக்காரர்களை ஒழித்திருந்தனர் மற்றும் நாட்டின் வழிப்பறிக்கொள்ளையை மிகவும் குறைத்திருந்தனர். பேரரசின் எல்லைப்பகுதிகள் தவிர போர் என்பதே எங்கும் இல்லாதிருந்தது. எபிரெய மொழியில் சமாதானம் என்ற கருத்துணர்வின்படியான. எல்லாருடைய நலனையும் குறிக்கோளாகக் கொண்ட, *shalom*, என்ற இசைவிணக்கமான கூட்டுறவு, ரோமானிய சேனைகளால் நிலைநாட்டப்பட இயலாததாக இருந்தது.[30]

ஹேங்கர் அவர்கள், முதல் நூற்றாண்டின் பலஸ்தீன வரலாற்று அமைவை மனதில் கொண்டவராக, இந்த பாக்கியம் செலாத்தே என்னபட்டவர்களுக்கு எதிராக இலக்கிடப்பட்டது என்று கருத்துத் தெரிவித்தார். இந்த யூதப்புரட்சியாளர்கள், வன்முறையினாலும், தங்கள் ரோமானிய அடக்குமுறையாளர்களை தூக்கியெறிதலினாலும், இஸ்ரவேல் இராஜ்யத்தை மறுபடியும் நிலைநாட்ட விரும்பினர் (காண்க யோவான் 6:15). அவர், “செலாத்தே என்னப்பட்ட பிரிவினர், தங்கள் இராணுவத்துவத்தினால், தாங்கள் ‘தேவனுக்குப் பற்றுதியான பிள்ளைகளாக’ இருந்தனர் என்று செயல்விளக்கப்படுத்தவும் நம்பிக்கையாயிருந்தனர்’’ என்று கூறினார். இருப்பினும் தேவனுடைய இராஜ்யம் அவ்வாறாக அறிமுகப்படுத்தப்படாது என்று இயேசு போதித்தார். அதற்குப்பதிலாக, இராஜ்யத்தின் வருகையானது தெய்வீக தூண்டுதலினால் வரும் என்றும், அதன் குடிமக்கள் சமாதானத்தை மேம்படுத்துபவர்களாக இருப்பார்கள்.[31]

இயேசுவைப் பின்பற்றுபவர்கள், சமாதானத்தைப் பற்றிச் சிந்தித்தல் மற்றும் பேசுதல் என்பவற்றை காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். கர்த்தர், “சமாதானத்தை நேசிப்பவர்கள் பாக்கியவான்கள்” என்றோ அல்லது “சமாதானத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பவர்கள் பாக்கியவான்கள்” என்றோ கூறவில்லை. அவர் தமது சீஷர்கள், சமாதானம் நிலவாத இடத்தில் அதைக் கொண்டுவரும்படி அழைத்தார். இந்த பாக்கியம் போராட்டத்தைத் தவிர்த்தல் என்பதை மாத்திரமே செய்பவர்களுக்கு வாக்குத்தத்தம் ஏற்படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக, தங்கள் வேறுபாடுகளை எதிர்கொண்டு அவற்றை வெற்றிபெறுபவர்களுக்கு உண்மையான சந்தோஷம் வருகிறது என்றே இது கூறுகிறது. பார்க்ளே அவர்கள் சமாதானம் பண்ணுதலின் பின்வரும் பகுதியை உற்றுக்கவனித்தார்:

இடர்ப்பாட்டைக் குறித்து எதுவும் செய்ய நாம் அஞ்சுதலினால், விஷயங்களை நேர்மறையாக ஏற்றுக்கொள்ளுதல் என்பதை அல்ல, ஆனால் விஷயங்களை செயல்துடிப்புடன் எதிர்கொள்ளுதல், போராட்டத்தில், போராட்டத்தின் வழி என்பதே சமாதானத்தின் வழியாக இருக்கும்போதும், சமாதானம் பண்ணுதல் என்பதையே இந்த பாக்கியம் வற்புறுத்திக் கேட்கிறது.[32]

சமாதானத்தை வளரச் செய்பவர்கள் தேவனுடைய பிள்ளைகள்

*என்று அழைக்கப்படுவார்கள் என்று இயேசு கூறினார். தேவன் மிக உன்னதமான சமாதானம் பண்ணுகிறவராக இருக்கிறார், அவர் தமது ஐக்கியத்திற்குள் மனிதகுலத்தைத் திரும்பப் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, தமது ஒரே பேறான குமாரனையே பலியாகச் செலுத்தச் செய்தார் (ரோமர் 5:1-11; எபேசியர் 2:11-22). அவர் "சமாதானத்தின் தேவனாக" இருக்கிறார் (பிலிப்பியர் 4:9; 1 தெசலோனிக்கேயர் 5:23). சமாதானம் பண்ணுகிறவர்கள், தேவனுடைய இயல்பில் பங்கேற்பதால் "தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்." உண்மையான விசுவாசிகளைத் தேவன் தமது "பிள்ளைகள்" என்று இந்த நிகழ்காலத்தில் அழைக்கிறார் என்பதில் கருத்துணர்வு இருக்கையில் (ரோமர் 8:14; கலாத்தியர் 3:26, 27), சமாதானம் பண்ணுகிறவர்களை, கடைசி நியாயத்தீர்ப்பில் அவர் தமது பிள்ளைகள் என்று ஒப்புக்கொள்ளவும் செய்வார்.*

## *துன்பப்படுகிறவர்கள் (5:10-12)*

**[10]"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**[11]"என்னிமித்தம் உங்களை நிந்தித்துப் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; [12]சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."**

*"பாக்கியவான்கள்" என்ற சொற்றொடர் 5:3-12ல் ஒன்பது முறைகள் காணப்பட்டாலும், நுட்பவகையில் ஒன்பது பாக்கியங்கள் இருந்தாலும், எட்டாவதும் (5:10) ஒன்பதாவதும் (5:11, 12) ஆகிய பாக்கியங்களுமே துன்புறுத்தப்படுதல் என்பதைப் பற்றிப் பேசுவதால், வழக்கமாக இவை ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. முதல் எட்டு பாக்கியங்கள் படர்க்கைப் பெயர்ச்சொல்லில் ("அவர்கள்") உள்ளன, ஆனால் ஒன்பதாவது பாக்கியம் முன்னிலைப் பெயர்ச்சொல்லில் ("நீங்கள்") மாறுகிறது. ஒருவேளை இயேசு, இவற்றில் ஒன்பதை மக்கள் கூட்டத்தினருக்குப் பொதுவாகவும் பின்பு ஒன்பதாவதைத் தமது சீஷர்களை இலக்குப்படுத்தியும் உரைத்திருக்கலாம்.[33] இயேசு, தமது சீஷர்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருத்தல் என்ற பணிப்பொறுப்பைப் பற்றிக் கலந்துரையாடும்போது, இந்த முன்னிலைப் பெயர்சொல்லைத் தொடர்ந்தார் (5:13-16).*

***வசனம் 10.*** *இந்தத் கடைசி வசனங்களில், "பாக்கியங்களில் முரண் உண்மைக் கூற்றுகள் ஒரு உச்ச கட்டத்தை அடைகின்றன."[34] இயேசு, **"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்"** என்று கூறினார். "துன்பப்படுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, "துரத்தப்படுதல், புறம்பே விரட்டப்படுதல் அல்லது தேடப்படுதல்" என்று அர்த்தப்படுகிறது. இந்தச் சொற்றொடர், உடல்ரீதியான துன்புறுத்தல், சித்தரவதை மற்றும் துன்புறுத்தப்படுதலின் பிற வடிவங்கள் ஆகியவற்றை அர்த்தப்படுத்துகிறது.*

*இந்த பாக்கியத்தின் வாக்குத்தத்தமாக உள்ள* ***பரலோகராஜ்யம்***

அவர்களுடையது என்பது, பொதுவாக துன்புறுத்தப்படுபவர்களுக்கு அல்ல, ஆனால் "நீதியினிமித்தம்" துன்புறுத்தப்படுபவர்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தீமையைச் செய்ததினால் துன்புறுத்தப்படுபவர்களுக்கும் கிறிஸ்துவினிமித்தம் துன்புறுத்தப்படுபவர்களுக்கும் இடையில் பேதுரு தெளிவாக வித்தியாசத்தை ஏற்படுத்தினார்:

> நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் (1 பேதுரு 4:14-16; காண்க 3:14).

**வசனம் 11.** துன்புறுத்தப்படுதலின் ஆய்வுக்கருத்தைப் பற்றி இயேசு தொடர்ந்து பேசினார்: **"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல் வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்."** துன்புறுத்தப்படுதல் என்பது, நிந்தனைகளையும் அவதூறுகளையும் உள்ளடக்குகிறது. லூக்கா 6:22 அதிக விபரத்தைக் கொண்டுள்ளது: "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." இங்கு "நிந்தித்து" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல், தீவிரமான நிந்தனையை உள்ளடக்கி இருக்கிறது, இது "திட்டி" அல்லது "இழிவாகப்பேசி" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். நேரடியான அர்த்தத்தில் இது, "ஒருவர், தம் பற்களில் நிந்தனையான வார்த்தைகளைச் சுழற்றிவிடுதல்" என்று அர்த்தப்படுகிறது.

"என்னிமித்தம்" என்பது "கிறிஸ்துவினிமித்தம்" என்று அர்த்தப்படுகிறது. இந்தச் சொற்றொடர் "நீதியினிமித்தம்" என்பதற்குச் சமானமானதாக உள்ளது (5:10). இயேசுவைப் போன்றே அவரது சீஷர்களும் தவறாக நடத்தப்படுவார்கள் என்று இயேசு உறுதிப்படுத்தியிருந்தார். அவர், "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" என்று கூறினார் (10:24). அவர் தமது சீஷர்களை, அவர்கள் பட்டணத்தை விட்டு பட்டணத்திற்குத் துரத்தப்படுவார்கள், கைதுசெய்யப்படுவார்கள், விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள், சவுக்கால் அடிக்கப்படுவார்கள் மற்றும் கொலையும் செய்யப்படுவார்கள் என்று எச்சரித்தார் (10:16-23).

**வசனம் 12.** இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, இப்படிப்பட்ட துன்பங்களின்போது, **"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்"** என்று கூறினார். லூக்கா 6:23ம் வசனம், "சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" என்று கூறுகிறது. துன்புறுத்தப்படுதலின்போது சந்தோஷப்படுதல் என்பது இன்றைய நாட்களின் சீஷர்களுக்கு, தீவிரமானதாகவும் உயர்கொள்கை இயல்புடையதாகவும்

காணப்படும் வேளையில், தொடக்ககால சபைக்கு இது இவ்வாறு இருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் சனதெரீன் சங்கத்தில் அடிக்கப்பட்டபின்பு, அவர்கள், "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டு புறப்பட்டு" சென்றனர் (நடபடிகள் 5:40, 41).

இயேசுவின் பின்வரும் வாக்குத்தத்தம் நிமித்தம், துன்புறுத்தப்படுகையில் சந்தோஷப்பட வேண்டும்: **"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்."** மேலே உள்ள ஆசீர்வாதங்களுடன் ஒப்பிடுகையில், கீழே நாம் படும் உபத்திரவங்கள், இலேசானவையாகவும் சற்றுக்காலும் மாத்திரம் இருப்பவையாகவும் உள்ளது (2 கொரிந்தியர் 4:17).

பாக்கியங்கள், "பரலோக இராஜ்யம்" பற்றிய குறிப்புகளுடன் தொடங்கி அதே குறிப்புகளுடன் முடிகின்றன. முதலாவது மற்றும் கடைசி பாக்கியங்கள் பரலோகம் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன: "பரலோக இராஜ்யம்" (5:3, 10) மற்றும் "பரலோகத்தில் உங்கள் பலன்" (5:12).

நீதியினிமித்தம் இயேசுவின் சீஷர்கள் உபத்திரவங்களை விசுவாச நிறைவுடன் சகித்துக்கொள்ளும் போது, அவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுடன் தங்கள் இடத்தை பெற்றுக்கொள்கின்றனர்: **"உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."** தீர்க்கதரிசிகள் தாங்கள் போதிக்க நாடிய மக்களால் புறக்கணிக்கப்பட்டு தீங்கு செய்யப்பட்டபோதிலும்கூட, அவர்கள் தேவனை சேவிக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் செய்தனர் (23:31, 34, 37; நடபடிகள் 7:52; எபிரெயர் 11:32-38; யாக்கோபு 5:10, 11). துன்புறுத்தப்படுதலின் இவ்வகையினால் பாடுபட்ட யாவரும் தேவனால் காக்கப்படுவார்கள்.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## சந்தோஷத்தை நாடுதல் (5:1-12)

சந்தோஷம் நமக்கு எவ்வாறு வருகிறது? நம்மை சந்தோஷப்படுத்துதல் என்பது வேறு யாருடைய பொறுப்பாகவாவது உள்ளதா? உயர்வருவாய் தரும் வேலையைக் கொண்டிருப்பதால், நமது விருப்பங்களுக்குத் தக்கவாறு ஒரு வீட்டைக் கொண்டிருப்பதால், சந்தோஷமான ஒரு சமூகத்தில் வாழ்வதால் அல்லது ஆதாயமிகுந்த நிதிநிலை முதலீடுகளைக் கொண்டிருப்பதால் சந்தோஷம் வருகிறதா? இல்லை, இவற்றில் எதில் இருந்தும் அது வருவதில்லை. உண்மையில், சந்தோஷத்திற்காக தேடுதல் என்பதே மாபெரும் சந்தோஷமின்மையை உண்டாக்க முடியும் (1 தீமோத்தேயு 6:9, 10). சந்தோஷம் என்பது அத்தியாவசியமாக நமக்குள் இருந்தே வருகிறது. கட்டுப்பாடுள்ள சமானமான வாழ்வை வாழும் நபர்தான், உண்மையிலேயே சந்தோஷமானவராக இருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவனுடனும் நம்மைச் சுற்றியிருக்கும் மக்களுடனும் சரியான உறவுமுறையில் இருப்பதில் இருந்தே உண்மையான சந்தோஷம் வருகிறது.

## இயேசு போதித்தவாறு இருத்தல் (5:1-12)

மத்தேயு சுவிசேஷத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள முதல் நான்கு பாக்கியங்கள், இருதயம் மற்றும் மனம் ஆகியவற்றின் உள்ளான கொள்கைகள் பற்றி அக்கறை செலுத்துகிறது. கடைசி நான்கு பாக்கியங்கள், மற்ற மக்களுடன் நாம் உறவுபடுதலின் வழியைக் காட்சிப்படுத்துதல்களாக உள்ளன. உதாரணமாக, நாம் "ஆவியில் எளிமை உள்ளவர்களாக" இருக்கும்போது (5:3), நம்மீது பொழியப்படும் தேவனுடைய இரக்கத்தை உணர்ந்து அறிவோம். பதிலுக்கு அது, நம்மை மற்றவர்கள் மீது இரக்கம் உள்ளவர்கள் ஆக்க வேண்டும் (5:7). நமது சொந்த பாவங்களை உணர்ந்தறிதலும் அவற்றிற்காக வருத்தப்படுதலும் (5:4) மிகத்தூய்மையான வாழ்வை வாழும் விருப்பத்தை நமக்குத் தரவேண்டும் (5:8). ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருத்தல் (5:5) என்பது நாம் சமாதானத்தை வழிநடத்தும் விஷயங்களை நாடக்காரணமாகும் (5:9). நாம் உண்மையிலேயே "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக" இருக்கும்போது (5:6), இயேசுவைப் பின்பற்றுபவர்களாக வாழ்வதற்கு நாம் செலுத்த வேண்டிய விலையைப் புரிந்து கொள்வோம் (5:10-12). "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று பவுல் எழுதினார் (2 தீமோத்தேயு 3:12).

டி. மார்ட்டின் லாயிட் ஜோன்ஸ் அவர்கள், பாக்கியங்கள் பற்றிய நான்கு முக்கியமான உண்மைகளைச் சுட்டிக்காண்பித்தார்.[35] (1) அவைகள், ஒவ்வொரு கிறிஸ்தவரும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கான விவரிப்பாக உள்ளன. (2) அவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவராலும் முற்றிலுமாக உள்வாங்கப் படவேண்டும் என்பதை நோக்கம் கொண்டுள்ளன. (3) அவைகள் இயல்பான மனவிருப்பங்கள் என்று அழைக்கப்படுபவைகளாக இருப்பதில்லை; அவைகள் இயல்பாக வருபவைகளுக்கு நேர் எதிரானவற்றைச் செய்யும்படி நமக்கு அறைகூவல் விடுக்கின்றன. (4) அவைகள் நம்மை, உலகத்திற்கும் அதின் இச்சைகளுக்கும் மேலாக வாழும்படியும் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களில் இருந்து உண்மையிலேயே மாறுபட்டவர்களாக வித்தியாசப்பட்டவர்களாக வாழும்படியும் நம்மை அழைக்கின்றன.

இன்றைய நாட்களில் மிக அதிகமான கிறிஸ்தவர்கள், மற்றும் கர்த்தருடைய சபையின் பல சபைக் குழுமங்களும்கூட, நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தின் சுற்றுச்சூழலைத் தழுவிக்கொள்ளவும் அவற்றிற்கு அனுசரித்துப்போகவும் முயற்சிப்பதில் காலத்தையும் பணத்தையும் விரயம் செய்கிறோம். இதைச் செய்வதற்கு மாறாக நாம், தனிப்பட்டு நிற்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் (காண்க யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15-17). உலகமானது சபையை ஊடுருவ நாம் அனுமதித்துள்ளோம், மற்றும் சபையானது மிக அதிகமாக உலகத்தைப் போன்று ஆகியுள்ளது. இயேசு தமது சீஷர்களிடத்தில், அவர்கள் இந்த உலகத்தில் இருந்தாலும் அவர்கள் "இந்த உலகத்தாராக" இருக்கக் கூடாது என்று கூறினார் (யோவான் 17:15-17).

## ஒரு கிறிஸ்தவரின் வாழ்வு (5:1-12)

பின்வரும் பொழிப்புரைகளை முதன்மைக் கருத்துக்களாகப் பயன்படுத்தி, பாக்கியங்கள் மீது ஒரு பாடம் மேம்படுத்தப்பட முடியும்:

1. ஆதாரமூலங்கள் நம்மிடம் போதுமானதாக இராததை உணர்ந்து அறிதல்.
2. நமது பாவங்கள் தேவனுடைய இருதயத்தை உடைந்துபோகச் செய்தலை உணருதல்.
3. தேவனுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தல்.
4. ஆவிக்குரிய உணவை ஆவலுடன் நாடுதல்.
5. இரக்கம் உள்ளவர்களாயிருக்க நினைவுவைத்தல்.
6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக நிலைத்திருத்தல்.
7. சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கத் தீர்மானித்தல்.
8. துன்பங்கள் வரும்போது சந்தோஷப்படுதல்.

## துயரப்படுகிறவர்கள் ஆறுதல் அடைவர் (5:4)

நமது பாவங்களின் சுமை நம்மை இடர்ப்படுத்தும்போது, மற்றும் அது நம்மால் சுமக்கக் கூடாத அளவுக்குப் பெரியதாகும்போது (காண்க சங்கீதம் 38:4; 51:3), அந்த சுமையை நம்மிடத்தில் இருந்து எடுத்துப் போட இயேசுவினால் முடியும் (மத்தேயு 11:28-30). கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்தின் மூலமாக நமக்கு அவர் அருளும் இரட்சிப்பை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, ஆவிக்குரிய ஆறுதல் நமக்குள் வளருகிறது. நாம் “ஆறுதல் அடைவோம்” என்று இயேசு கூறினார். பவுல், “ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை” என்று எழுதினார் (ரோமர் 8:1). விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றில், ஒருநபர் மாபெரும் நிம்மதியைப் பெறுகிறார் மற்றும் அவர் தமது பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டதை உணர்ந்தறியும்போது விடுதலை பெறுகிறார். அவரது வசனம் என்ற வெளிச்சத்தில் நாம் நடந்தால் மற்றும் அவரிடத்தில் நமது பாவங்களைத் தொடர்ந்து அறிக்கையிட்டல் (1 யோவான் 1:7-10) நாம் இந்த ஆசீர்வாதத்தன்மையைத் தொடர்ந்து மகிழ்வுடன் அனுபவிக்க முடியும்.

## நீதியினிமித்தம் பசியாயிருத்தலும் தாகமாயிருத்தலும் (5:6)

இவ்வசனப்பகுதியில் “நீதி” என்ற சொற்றொடர், இரட்சிக்கப்பட்டவர்கள் மீது தேவன் கிருபையாய் அருளும் கொடையை விவரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது (2 கொரிந்தியர் 5:21). ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற கிறிஸ்துவின் கட்டளைக்கு, நாம் விசுவாசத்தில் கீழ்ப்படியும்போது, தேவன் நமக்கு “நீதியை” அறிவிக்கிறார் (ரோமர் 3:21-26; 6:3, 4, 17, 18). கிறிஸ்துவின் பலியை நாம் ஏற்றுக்கொள்வதன் அடிப்படையில் தேவன் நமக்கு இரு விஷயங்களைச் செய்கிறார்: மன்னிக்கப்பட்ட நமது பாவங்களை நமக்கெதிராகக் குற்றம் சாட்டுவதில் இருந்து அவர் விலக்குகிறார், மற்றும் “கிரியைகள் இல்லாத நிலையில்” அவர் நமக்கு “நீதியை அருளுகிறார்” (ரோமர் 4:5-9).

“நீதி” என்பது தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தலையும் குறிக்கிறது (5:10; 6:1; லூக்கா 1:6; 2 தீமோத்தேயு 3:16; எபிரெயர் 12:11). “நீதிக்காக” ஏங்குதல் என்பதே ஆவிக்குரிய வாழ்வின் அடையாளமாக

உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், இந்த ஆவிக்குரிய ஏக்கத்தைக் கொண்டிராவிட்டால், நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அதில் இருந்து நாம் குறைவுபடுவோம். "நன்மையைச் சாதித்தவர்களுக்கு மாத்திரமே ஆசீர்வாதம் வந்தது என்றால், எவரொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க மாட்டார். அதற்குப்பதிலாக, அது தவறுகள் மற்றும் தோல்விகள் இருந்தபோதிலும், இன்னமும் நன்மைக்கு, பரிவிரக்கமான அன்பைப் பற்றிக்கொண்டுள்ளவருக்கு வருகிறது."[36]

நாம் தேவனுடைய வசனத்தினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்றால், குறிப்பிட்ட கால அளவுக்கு உணவு மற்றும் தண்ணீர் இல்லாமல் இருந்தால் நாம் எவ்வாறு பசியும் தாகமுமாய் இருப்போமோ, அதுபோன்று தேவனுடைய வசனத்தின்மீதும் பசிதாகமாயிருக்க வேண்டும். சரீரம் அழுகுகிறதாகவும் ஆனால் ஆத்துமா நித்தியமானதாகவும் இருப்பதால், நமது ஆவிக்குரிய பசியைத் தணித்தல் என்பது நமது வயிறுகளை நிரப்புவதைக் காட்டிலும் அதிக முக்கியமானதாக உள்ளது.

## தேவனை தரிசித்தல் (5:8)

நாம் காண விரும்புபவற்றைக் காணுகிறோம் என்பது வழக்கிட இயலாததாக உள்ளது. ஒரு விசுவாசி வானங்களைக் கண்ணோக்கும்போது, அவர் தேவனுடைய கைவேலையைக் காண்கிறார் (சங்கீதம் 19:1). ஒரு நாத்திகவாதியோ எல்லையற்ற பெருவெளியையும் கருமையையும் மாத்திரமே காணுகிறார். மலர்களை நேசிப்பவர் அவற்றில் அழகைக் கண்டு நறுமணத்தை உணரலாம், ஆனால் பயிற்சி பெற்ற தாவரவியல் வல்லுநர் அதை அதன் உயிரியல் பெயரால் அழைத்து அதன் மறைவான பண்புகளைப் பற்றிக் கலந்துரையாட முடியும். ஒரு கலைப்படைப்பைக் கண்ணோக்கும்போது, கலை விமர்சகர் அதை ஒரு மிகச்சிறந்த படைப்பாகக் காணலாம், அதே வேளையில் பயிற்சியற்ற வகையில் அதை உற்றுநோக்குபவர் வண்ணங்கள் மற்றும் உருவகங்கள் ஆகியவற்றை மாத்திரம் காண்கிறார். தேவனை அவரது நித்தியத்துவத்தில் காணுதல் என்பதில் நிறைவான மகிழ்ச்சி இருக்கும், ஆனால் வாழ்வின் எளிய விஷயங்களில் அவரைக் காணுதல் என்பது நமது பயணத்தை அதிகம் பலனுள்ளதாக்கும். நம்மைச் சுற்றிலும் நாம் அவரது கைவேலையையும் (ரோமர் 1:20), நமது வாழ்வில் அவரது அருளிரக்கத்தின் செயலையையும் (ரோமர் 8:28) காண முடியும்.

## உண்மையான சமாதானம் பண்ணுகிறவர்கள் (5:9)

நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாகவோ அல்லது கலகம் பண்ணுகிறவர்களாகவோ இருக்கக் கூடிய திறனைக் கொண்டுள்ளோம். சமாதானத்தை விரும்புவதாகக் கூறுகிற எல்லா மக்களும் உண்மையில் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருப்பதில்லை. சமாதானத்தை விரும்புவதாக உரிமைகோருபவர்களில் பலர் யுத்தத்தை விரும்பித் தேர்ந்துகொள்கின்றனர். சமாதானத்தைக் கொண்டுவருதலில் செயலற்றவர்களாக இருப்பதற்கு மாறாக செயல்துடிப்புடன் பங்கேற்றல் பற்றி இயேசு பேசினார். யுத்தத்தை ஒழிப்பவர்களாக மாத்திரம் அல்ல, ஆனால் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கும்படி நம்மை அவர் அழைக்கிறார்.

நமது நவீனமான இந்த உலகத்திற்கு, ஒருவேளை இந்த பாக்கியத்தைக் காட்டிலும் அதிகம் தகுதியான செய்தியொன்றும் இராதிருக்கலாம்: "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (5:9). மனிதர்கள் மத்தியில் யுத்தம் பற்றிய தொடர்ந்து அச்சுறுத்தலும், சந்தோஷமற்ற, கலகமான மற்றும் பிரிவினையான இந்த சூழ்நிலையும் எப்போதும் இருப்பது ஏன்? இந்த பாக்கியத்தின்படி, இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில் மாத்திரமே உள்ளது - பாவம். மனித இச்சை, பேராசை, சுயநலம் மற்றும் சுயமையத் தன்மை ஆகியவையே நமது எல்லா துன்பங்களுக்கும் விளக்கமாக உள்ளது; இது எல்லாத் துன்பங்களுக்கும், மற்றும் தனிநபர்களுக்கு இடையிலோ, ஒரு நாட்டில் உள்ள பல்வேறு குழுக்களுக்கு இடையிலோ அல்லது நாடுகளுக்கு இடையிலோ பிரிவினைக்கும் காரணமாக உள்ளது. மனிதன் மற்றும் பாவம் குறித்த புதிய ஏற்பாட்டு உபதேசத்தை நாம் ஏற்றுக்கொள்ளாத வரையில், நவீன உலகத்தின் பிரச்சனையை நம்மால் புரிந்துகொள்ளத் தொடங்க இயலாது.

தேவனுடைய பிள்ளையாக இருப்பவர், "சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடும்படி" அழைக்கப்படுகிறார் (ரோமர் 14:19). கூடுமானால் விசுவாசிகள் "எல்லா மனுஷரோடும்" சமாதானமாயிருக்க வேண்டும் (ரோமர் 12:18). "சமாதானம்" என்பது, ஆவியானவரால் நடத்தப்படும் நபரின் வாழ்வில் உண்டாக்கப்படும் கனியின் ஒரு கூறாக உள்ளது (கலாத்தியர் 5:22). எபேசுவில் இருந்த சபையாரிடத்தில், "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று பவுல் வேண்டிக்கேட்டுக் கொண்டார் (எபேசியர் 4:3).

உள்ளான சமாதானத்தைக் கொண்டிருத்தலுக்கும் தேவனுடன் சமாதானத்தைக் கொண்டிருத்தலுக்கும்கூட இயேசுவின் கூற்றை நடைமுறைப்படுத்த முடியும். ஏசாயா, "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றார் (ஏசாயா 48:22). நமது பாவங்கள் மன்னிக்கப்படும் வரையிலும் மற்றும் நமது சிருஷ்டிகருடன் நாம் சமாதானம் கொள்ளும் வரையிலும், நமக்குள் சமாதானம் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு இல்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தபின்பு, நம்முடைய எல்லா கவலைகளையும் தேவனிடத்தில் ஜெபத்தில் எடுத்துச் செல்லும்போது நாம் "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை" கொண்டிருக்க முடியும் (பிலிப்பியர் 4:6, 7).

## உபத்திரவத்தின் முகங்கள் (5:10-12)

பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறினார் (2 தீமோத்தேயு 3:12; காண்க யோவான் 15:20; 1 தெசலோனிக்கேயர் 3:3, 4). கிறிஸ்தவர்களுக்கு எதிராக இழைக்கப்படக் கூடிய உபத்திரவத்தின் பல்வேறு வகைகளை, மத்தேயு 5:10, 11ல் இயேசு குறிப்பிட்டார்.

*கிறிஸ்தவர்கள் உடல்ரீதியாகத் துன்புறுத்தப்படலாம்.* தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் பலர் சிலுவையில் அறையப்பட்டனர், கழுமரத்தில் கட்டிவைத்து எரிக்கப்பட்டனர், ரோம அரங்கசாலைகளில், சலிப்புற்ற

பொதுஜனத்தின் வேடிக்கைக்காகக் காட்டு மிருகங்களால் பட்சிக்கப்படும்படி, கூட்டமாக அனுப்பப்பட்டனர் அல்லது அரங்கசாலைகளில் இரவு வேளையில் வெளிச்சம் தருவதற்காக மனித விளக்குகளாக உயிருடன் எரிக்கப்பட்டனர்.[37]

*கிறிஸ்தவர்கள் "நிந்திக்கப்" படலாம்.* நாம் நீதியுள்ள வாழ்வை நடத்தினால், உலகப்பிரகாரமாக வாழ்பவர்களின் கைகளில் நாம் நிந்தித்தல் மற்றும் துன்புறுத்தப்படுதலின் குறிப்பொருள்களாக இருப்போம் (யோவான் 15:18-20).

*கிறிஸ்தவர்களைக் குறித்துப் பொய்கள் கூறப்படலாம்.* பொல்லாங்கு செய்பவர்கள், வெளிப்படையாகப் பேசுவதற்கு மாறாக, கிறிஸ்தவர்களுக்குப் பின்னால் அடிக்கடி குசுகுசுப்பாகப் பேசுகின்றனர். வெளிப்படையான தாக்குதல்கள் புண்படுத்துதல் நிறைந்தவையாக இருப்பதுபோன்றே, இவைகளும் குறைந்த பட்சம் இவற்றிற்கு எதிராக நம்மைத் தற்காத்துக் கொள்ளும்படியான வாய்ப்பை நமக்குக் கொடுக்கின்றன. தாக்குதல்கள் "முதுகில் குத்துதல்களாக" இருக்கும்போது, அவற்றைப் பற்றி நாம் அறிவதற்கு முன்னரே, அவைகள் நமது புகழ்ச்சிக்குத் தீவிரமான ஊறு விளைவிப்பவையாக இருக்க முடியும்.

துன்புறுத்தப்படுதலுக்கு நாம் எவ்வாறு மறுசெயல் செய்ய வேண்டும்? "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்" என்று இயேசு கூறினார் (5:12). நாம் "பல் இளித்துக்கொண்டு அதைச் சகிக்க வேண்டும்" என்று அவர் மிகச்சரியாக அர்த்தப்படுத்தவில்லை. சந்சோஷப்படுவதற்கான காரணத்தை நமக்கு அவர் நினைவூட்டினார்: "பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்ற உண்மை. பரலோகத்தில் உள்ள நமது நித்திய வீட்டில் நமது நிறைவான பலன் இருக்கும், ஆனால் எல்லா பலனுமே எதிர்காலத்தில் தான் உள்ளது என்று கூறுவதற்கில்லை (மாற்கு 10:29, 30). நாம் கிறிஸ்துவுக்குள் இப்போது நிறைவாழ்வையும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறோம் (யோவான் 10:10; எபேசியர் 1:3).

## உபத்திரவம் (5:10-12)

நல்லறிவு உணர்வில் நாம் குறைவுபடுதல், மதியீனம் அல்லது தெளிவற்ற தன்மை ஆகியவற்றினால் சிலவேளைகளில் நாம் துன்புறலாம். சிலர், பொல்லாத செயல்களின் விளைவாக மாத்திரம், பூமிக்குரிய விளைகளை எதிர்கொள்ளும்போது, தங்கள் நம்பிக்கைகளின் காரணமாகத் தாங்கள் துன்புறுத்தப்படுவதாக நம்புகின்றனர் (காண்க 1 பேதுரு 4:14-16). இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் ஏதோ வேதசாட்சிகளாகத் துன்புறுபவர்கள் போன்று செயல்படுகின்றனர். இவ்வகையான "பாடு அனுபவிக்கும்" நடத்தையானது தன்னில்தானே சில மக்களில் உபத்திரவத்தை அழைப்பதாக உள்ளது. இப்படிப்பட்ட தனிநபர்களைப் பற்றி, "இவர்கள் மிகவும் வைராக்கியம் கொண்ட மக்களாக, தங்கள் சட்டைப் பைகளுக்கு அப்பால் ஒருக்காலும் சென்றிருக்கக்கூடாத, மதத்தைப் பொறுத்தமட்டில் பெயரைக் கைப்பற்றிக் கொள்பவர்களாக இருக்கின்றனர்" என்று ராபின்ஸன் அவர்கள் கூறினார்.[38]

உணர்வைப் புண்படுத்தும்படி நடந்துகொள்ளாதபடி, ஒழுங்குமீறிய வகையில் உடை உடுத்தாதபடி அல்லது பிறர் மனம் புண்படும்படி பேசாதபடி, நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு நாம் நடந்துகொண்டு மற்றவர்கள் நம்மைப் புறக்கணிக்கும்படியோ அல்லது நம்மைத் தாழ்வாகப்

பார்க்கும்படியோ, அவர்கள் மனதைப் புண்படுத்தினால், அவர்கள் நம்மைத் துன்புறுத்துகின்றனர் என்று கூறுவதற்கில்லை. மாறாக நாம் நமது தகுதியற்ற நடக்கையின் காரணமாகவே துன்புறுகிறோம் என்றாகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று இயேசு கூறவில்லை.

குறிப்புகள்

[1]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 106-7. [2]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 95. [3]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 84. [4]இவ்விரு பிரசங்கங்களின் ஒற்றுமையான முறைமைக்கு, G. N. Stanton, "Sermon on the Mount/Plain," in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 736 என்ற புத்தகத்தில் உள்ள வரைவட்டவணையைக் காணவும். [5]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 78. [6]மத்தேயு 5:14, 17, 19-24, 27-31, 33-38, 41, 43, 45, 47; 6:1-8, 14-18; 7:6, 12ஆ, 15, 22, 23. [7]பாக்கியங்கள், "உண்மையான சீஷர்" ஒருவரின் எண்ணப்போக்கை "உலகப்பிரகாரமான மனிதர்" ஒருவரின் எண்ணப்போக்குடன் நேரெதிராக ஒப்பிடுகிறது என்று R. T. ஃபிரான்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (Frances, 109). [8]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 7. [9]இயேசுவைப் பின்பற்றியவர்களில் பலர் "சீஷர்கள்" என்று குறிப்பிடப்பட்டனர், ஆனால் அவர்கள் உறுதிப்பாட்டின் பல்வேறு நிலைகளைக் கொண்டிருந்தனர் மற்றும் அவரைப் பின்பற்றுவதற்கு காரணங்கள் பலவற்றைக் கொண்டிருந்தனர். தங்களில் உறவுகளில் ஆழமற்ற தன்மையைக் கொண்டிருந்தவர்கள் விரைவிலேயே அவரைப் பின்பற்றுவதை விட்டுவிட்டனர் (யோவான் 6:66-68). [10]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 35.

[11]William Barclay, *The Gospel of Matthew*, vol. 1, 2d ed., The Daily Study Bible (Philadelphia: Westminster Press, 1958), 79. [12]சங்கீதம் 14:4-6; 22:26; 34:6; 35:10; 37:14, 15; 40:17; 82:2, 3; 86:1, 2; 112:9; 113:7; 140:12, 13. [13]Hagner, 91. [14]William Barclay, *A New Testament Wordbook* (New York: Harper & Brothers, n.d.), 104. [15]Barclay, *Matthew*, 93. [16]Ibid. [17]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 39. [18]Ibid. [19]James McGill, "Blessed Are the Meek," *Spiritual Sword Lectures* (1982): 32. [20]Hagner, 93.

[21]Morris, 99. [22]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew 1-7* (Chicago: Moody Press, 1985), 178. [23]பழங்கால ரோமாபுரியில் ஸ்தோயிக்கர்கள், "புருஷராயிருத்தல்" அல்லது "ஒழுக்கநெறி" என்பதை வலியுறுத்தினர். இந்தச் சிந்தனை கிரேக்க நாட்டில் தோன்றிற்று மற்றும் பனேஷியஸ் (கி.மு. 185-110) மற்றும் பொஸிடோனியஸ் (கி.மு. 135-51) என்ற இரண்டு கிரேக்கத் தத்துவஞானிகளால் இது ரோமாபுரியில் பிரபலப்படுத்தப்பட்டது. பிற்கால கிரேக்க எழுத்தாளரான டியோஜெனிஸ் என்பவர், "பரிதபித்தல்" அல்லது "இரக்கம்" என்பதை ஆத்துமாவின் பிணிகளின் மத்தியில் பட்டியலிட்டார். (Diogenes Laertius *Lives of Eminent Philosophers* 7.115.) [24]Talmud *Shabbath* 151b. [25]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary*

*and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 71. [26]MacArthur, 191. [27]Haddon W. Robinson, *The Christian Salt & Light Company* (Grand Rapids, Mich.: Discovery House Publishers, 1988), 65. [28]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 35. [29]Lewis, 83. [30]Hare, 42.

[31]Hagner, 94. [32]Barclay, *Matthew,* 104. [33]*சமனான இடத்தில் உரைக்கப்பட்ட பிரசங்கத்தில் உள்ள நான்கு பாக்கியங்களிலும் முன்னிலைப் பெயர்ச்சொல் உள்ளது (லூக்கா 6:20-23).* [34]Hagner, 94. [35]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 32-39. [36]Pat Ott, "Attitudes from the Beatitudes," *Christian Woman* (January/February 1986): 33. [37]William Byron Forbush, ed., *Fox's Book of Martyrs* (Philadelphia: Universal Book and Bible House, 1926). [38]Robinson, 89.